## அத்தியாயம் 8

## தமிழ் நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை 2002 ஆம் ஆண்டு சென்னையை தலைமையிடமாக கொண்டு சங்க பதிவு சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்து அமைக்கப்பட்டது. இந்த முகமை வேளாண்மைத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் முழு செயல்பாடு மற்றும் நிதி அதிகாரங்களை கொண்டு தனித்துவம் வாய்ந்த நிறுவனமாக செயல்பட்டுவருகிறது. இம்முகமையின் முக்கிய நோக்கம் தரிசு நிலங்களை மேம்படுத்துதல், அரசு தரிசு நிலங்களை நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு விநியோகித்தல் மற்றும் பல்வேறு அமைச்சகங்களிலிருந்து வழங்கப்படும் நிதியினை பெற்று அனைத்து நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டங்களான தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி மற்றும் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டங்கள் போன்றவை இம்முகமை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டு திட்டம் 2010–11 ஆம் ஆண்டு முதல் நீர்வடிப்பகுதி அணுகுமுறையில் தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்திற்கு இணைப்பு முகமையாகவும், செயல்படுத்தும் முகமையாகவும் செயல்பட்டு வருகின்றது. மேலும் பல்வேறு மாநில / மத்திய திட்டங்களான தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் (NFSM), வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA), வேளாண்மை இணையம் (AGRISNET) மற்றும் தேசிய மண்வள மற்றும் உர மேலாண்மை திட்டம் (National Project on Management of Soil Health & Fertility) ஆகிய திட்டங்களின் செயல்பாட்டிற்கு இணைப்பு முகமையாக செயல்பட்டு வருகின்றது.

### I. நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு அரசு தரிசு நிலங்களை இலவசமாக வழங்கும் திட்டம்

2006–07ஆம் ஆண்டு தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிலங்கள் மூன்று இனங்களாக வகை செய்யப்பட்டுள்ளது.

இனம் I எந்தவித ஆக்கிரமிப்பும் இல்லாத அரசு தரிசு நிலங்கள்

இனம் II: சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு தரிசு நிலங்கள்

இனம் III: சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சொந்தமான பட்டா தரிசு நிலங்கள்

**திட்டத்தின் நோக்கங்கள்:**

I. தரிசு நிலங்களை கண்டறிந்து, மேம்பாடு தேவைப்படும் நிலங்களைத் தக்க முறையில் மேம்படுத்தி நிரந்தர வருவாய் மற்றும் இலாபகரமான சாகுபடிக்கு உகந்த நிலங்களாக மாற்றி, நிலமற்ற ஏழை தொழிலாளர் குடும்பங்களுக்கு பட்டா வழங்குதல்.

II. இனம் I மற்றும் IIன் கீழ் 10 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்டு ஒரே தொகுப்பாக உள்ள நிலங்களில் நீர் ஆதாரம் இருப்பின், நில மேம்பாடு செய்து, ஆழ்துளைகுழாய் கிணறு அமைத்து இலவச மின்சாரத்துடன், சொட்டு நீர்பாசன வசதி செய்து, தரம் வாய்ந்த பழமரக் கன்றுகள் நடவு செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

III. சிறு மற்றும் குறு விவசாயிகளின் தரிசு /புஞ்சை பட்டா நிலங்கள் சேர்ந்த 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட ஒரே தொகுப்பாக உள்ள நிலங்களில் சிறு மற்றும் குறு விவசாயிகள் தாங்களாகவே முன் வந்தால் அந்நிலங்களில் நீர் ஆதாரம் இருப்பின், நில மேம்பாடு செய்து, ஆழ்துளைகுழாய் கிணறு அமைத்து, இலவச மின்சாரத்துடன் சொட்டு நீர்பாசன வசதி செய்து, தரம் வாய்ந்த **பழமரக் கன்றுகள்** நடவு செய்து / வேளாண்மைப்பயிர் சாகுபடி செய்து நிரந்தர விளைநிலமாக ஆக்கப்படுகிறது.

10 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் உள்ள தொகுப்பு நிலங்கள், 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் உள்ள தொகுப்பு நிலங்களில் அமைக்கப்படும் ஆழ்குழாய் கிணற்றுடன் கூடிய சொட்டு நீர் பாசனஅமைப்பினை பராமரிக்க, அத்தொகுப்பில் உள்ள பயனாளிகளுக் கென்று சங்கம் அமைத்து, அந்த பாசன அமைப்பு அச்சங்கத்திடம் ஒப்படைக்கப்படும். நீர்வளம் இல்லையெனில் விவசாயிகள் விருப்பத்திற்கு ஏற்ப உயிர் எரிசக்தி மரக்கன்றுகள் மற்றும் தீவனப் பயிர்கள் நடவு செய்து தரப்படுகிறது.

**சாதனை:**

**அ. நில மேம்பாடு**

வருவாய் துறை மூலம் தேர்வு செய்யப்படும் தரிசு நிலங்களில் நில மேம்பாடு தேவைப்படும் பரப்புகள் வேளாண் பொறியியல் துறை மூலம் மேம்படுத்தப்படுகிறது. நில மேம்படுத்தப்பட வேண்டிய 53,440 ஏக்கரில் இது வரை 53,363 ஏக்கர் மேம்படுத்தப்பட்டு 32961 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். நிலத்தடி நீரை பெருக்கிடவும், பாசனத்திற்காகவும் 15 x 3 x 1.5 கன மீட்டர் அல்லது 15 x 6 x 1.5 கன மீட்டர் அளவுள்ள பண்ணைக் குட்டைகளுக்கு முறையே ரூ.2,750/– மற்றும் ரூ.4,650/– மானியத்தில் அமைத்து தரப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 16471 பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**செயல் சாதனை (பரப்பு ஏக்கரில்)**

| திட்ட செயல்பாடு | இதுவரை அளிக்கப்பட்டபரப்பு | பயனாளிகள் எண்ணிக்கை | மேம்படுத்தப்பட வேண்டிய பரப்பு | மேம்படுத்தப்பட்டபரப்பு |
|---|---|---|---|---|
| முதற்கட்டம் (17.9.06) | 25,282 | 24,358 | 11,122 | 11,122 |
| இரண்டாம்கட்டம் (17.12.06) | 25,806 | 26,749 | 8,078 | 8,078 |
| மூன்றாம் கட்டம் (17.3.07) | 26,029 | 20,648 | 5,490 | 5,490 |
| நான்காம் கட்டம் (17.6.07) | 24,506 | 19,821 | 6,763 | 6,763 |
| ஐந்தாம் கட்டம் (17.9.07) | 32,066 | 24,932 | 6,547 | 6,547 |
| ஆறாம் கட்டம் (29.12.07) | 26,982 | 21,487 | 5,411 | 5,411 |

**செயல் சாதனை (பரப்பு ஏக்கரில்)**

| திட்ட செயல்பாடு | இதுவரை அளிக்கப்பட்ட பரப்பு | பயனாளிகள் எண்ணிக்கை | மேம்படுத்தப்பட வேண்டிய பரப்பு | மேம்படுத்தப்பட்ட பரப்பு |
|---|---|---|---|---|
| ஏழாம் கட்டம் (17.3.08) | 18,040 | 18,979 | 2,925 | 2,925 |
| எட்டாம் கட்டம் (17.6.08) | 12,901 | 4,355 | 1,136 | 1,126 |
| ஒன்பதாம் கட்டம்(17.9.08) | 16,493 | 11,948 | 1,711 | 1,644 |
| பத்தாம் கட்டம் (17.11.08) | 2,394 | 1,664 | - | - |
| 15.1.2010 வரை | 1,008 | 2,415 | | - |
| ஒருங்கிணைப்பு | - | - | 4,257 | 4,257 |
| மொத்தம் | 2,11,507 | 1,77,356 | 53,440 | 53,363 |

**ஆ. 10 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட தொகுப்பு நில மேம்பாடு:**

இத்திட்டத்தில் இதுவரை இனம் I மற்றும் இனம் IIல் உள்ள 143 தொகுப்பு நிலங்களில் உள்ள 2,656.92 ஏக்கரில் ரூ.609.72 இலட்சம் செலவில் நிலம் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 120 தொகுப்பு நிலங்களின் 2253.78 ஏக்கர் மேம்படுத்தப்பட்டு பழ மரக்கன்றுகள் நடப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஏனைய 23 தொகுப்பு நிலங்களில் உள்ள 403.14 ஏக்கர் நிலங்களில் மேம்பாட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இத்தொகுப்பு நிலங்களில் உள்ள 2000 பயனாளிகளுக்கு உர நிர்வாகம், சொட்டு நீர் பாசனம், நடவு பற்றிய தொழில் நுட்ப பயிற்சி, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொகுப்பு நில மேம்பாட்டில் உள்ள பொது கட்டமைப்புகளை பராமரித்தல் பற்றியும் விளக்கப்படுகிறது.

**இ. 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் தொகுப்பாக உள்ள தனியார் பட்டா தரிசு/புஞ்சை நிலங்களில் பழ மர கன்றுகள் நட்டு மேம்பாடு செய்தல்.**

சிறு குறு விவசாயிகளுக்கு சொந்தமான 50 ஏக்கருக்கு மேலான பட்டா தரிசு தொகுப்பு நிலங்களில் பழ மரம் மற்றும் உயிர் எரிசக்தி மரப்பயிர் தொகுப்புகளை ஏற்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகுப்பு நிலங்களில் ஆழ்துளைகுழாய் கிணறு அமைத்து சொட்டுநீர் பாசன வசதியுடன் இலவச மின்சாரம் வழங்கி உயர் வருவாய் அளிக்கும் பழ மர கன்றுகள் இலவசமாக நடவு செய்து வழங்கப்படுகிறது. நிலத்தடி நீர் இல்லாத இடங்களில் உயிர் எரிசக்தி மரக்கன்றுகள் நடவு செய்யப்படுகிறது.

இதுவரை 47 தொகுப்பு நிலங்களில் உள்ள 2,627.23 ஏக்கர் பரப்பில் ரூ.623.97 இலட்சம் செலவில் நிலம் மேம்படுத்தப்பட்டு 1620 பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இவற்றில் 10 தொகுப்பு நிலங்களில் 552.20 ஏக்கரில் ரூ.140.25 இலட்சம் செலவில் பழ மரக்கன்றுகள் நடப்பட்டு 296 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 37 தொகுப்பு நிலங்கள் அடங்கிய 2,075.03 ஏக்கரில் ரூ.483.72 இலட்சம் செலவில், 6 தொகுப்பு நிலங்களில் உயிர் எரிசக்தி மரங்களும் 31 தொகுப்பு நிலங்களில் பழ மரக்கன்றுகளும் நடவு செய்து 1324 பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

**ஈ. 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் தொகுப்பாக உள்ள தனியார் பட்டா தரிசு/புஞ்சை நிலங்களில் வேளாண்மை பயிர்கள் நட்டு மேம்பாடு செய்தல்.**

2009–10 ஆம் ஆண்டு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சொந்தமான 50 ஏக்கருக்கு மேலாக உள்ள பட்டா தரிசு நிலங்களில் வேளாண்மை பயிர்களை தொகுப்பு நில அடிப்படையில் மேம்படுத்திட அரசு அனுமதித்துள்ளது. இத்தொகுப்பு நிலங்களில் இலவசமாக ஆழ்குழாய் கிணறு அமைத்து, சொட்டு நீர் பாசன வசதியுடன் இலவச மின்சாரம் வழங்கி உயர் வருவாய் அளிக்கும் வேளாண்மை பயிர்களை சாகுபடி செய்திட திட்டமிடப்பட்டு தொகுப்பு நிலங்கள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்**

சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக இதர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**நிதி சாதனை**

இத்திட்டத்தில் இதுவரை ரூ.2,711.98 இலட்சம் செலவில் தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் பெறும் வகையில் இத்திட்டம் 2010–11ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகளின் வருவாய் அதிகரித்து அவர்களின் வாழ்க்கை தரம் மேலும் மேம்படுத்தப்படும்.

**2. தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாடு திட்டம் (நவப்ரா)**

தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாடு திட்டம் (நவப்ரா) தமிழகத்தில் 8வது ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்து (1990–91) செயல்படுத்தப்பட்டு வருகிறது இத்திட்ட செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் செலவினை முறையே 90% மற்றும் 10% என்ற அடிப்படையில் பகிர்ந்து கொள்கின்றன.

**குறிக்கோள் :**

- இயற்கை வளங்களை பேணி பாதுகாத்து, பெருக்கி திறம்பட பயன்படுத்துதல்
- வேளாண்மை உற்பத்தியை நீடித்து பெருக்குதல்

- பசுமை தரும் மரங்கள், தாவரங்களை வளர்த்து நலிவடைந்துள்ள இயற்கை சூழலை மேம்படுத்துதல்.
- மானாவாரி மற்றும் பாசன நிலங்களுக்கிடையே உள்ள மகசூல் வேறுபாட்டினை களைதல்
- கிராமப்புற வேலை வாய்ப்பைப் பெருக்குதல்

இத்திட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை வழியாக கிராம அளவில், நீர்வடிப்பகுதி சங்கங்கள் / குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், இத்திட்டத்தின் கீழ், 23 மாவட்டங்களிலுள்ள 755 நீர்வடிப்பகுதிகளில், 2,90,338 எக்டர் பரப்பளவை மேம்படுத்த ரூ.130.65 கோடி செலவிடப்பட்டது.

11 வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 18 மாவட்டங்களில் 200 நீர்வடிப்பகுதிகளில் 117700 எக்டர் நிலப்பரப்பினை ரூ.70.59 கோடி செலவில் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2010–11 ஆம் ஆண்டில் 35000 எக்டர் நிலப்பரப்பு, ரூ.21.00 கோடி செலவில் இத்திட்டத்தின் கீழ் பண்படுத்தப்படவுள்ளது.

## 3. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி - நபார்டு

நபார்டு வங்கி உதவியுடன் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம், 6 ஆண்டு திட்ட காலத்தில் 2004–2005 ஆம் ஆண்டு முதல் ரூ.60 கோடி மதிப்பீட்டில் 100 நீர்வடிப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### குறிக்கோள்

1. நீர்வடிப்பகுதி பங்கேற்பு தொடர்பான செய்திகளை பரப்புதல்.
2. அரசு, அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களை இத்திட்டத்தில் பங்கேற்க செய்தல்.
3. இத்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளின் தேவைக்கேற்ப நீர்வடிப்பகுதிகளை மேம்படுத்த நீர்வடிப்பகுதி சங்கங்கள் மற்றும் நீர்வடிப்பகுதி குழுக்களை உருவாக்குதல்.

### நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதியின் இனங்கள்

21.11.2007 முதல் புதிய திட்ட வழிமுறையின்படி செயல்படுத்தப்படுகிறது.

1. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதியின் கொள் திறன் வளர்ப்பு நிலை பணிகளுக்கு 100 சதவிகிதம் நபார்டு வழங்கும் மானியமாகும்
2. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதியின் முழு செயல்பாட்டு நிலை பணிகளுக்கு 50 சதவிகிதம் மாநில அரசுக்கு நபார்டு வங்கி வழங்கும் கடன் மற்றும் 50 சதவிகிதம் நபார்டு வங்கி வழங்கும் மானியமாகும். இதனால் மொத்த நீர்வடிப்பகுதிகள் 100 லிருந்து 150 ஆக உயர்ந்துள்ளது.
3. வட்டி விகிதம் 4.5%
4. திருப்பி செலுத்தும் காலம் – ஒன்பது ஆண்டுகள் (3 ஆம் ஆண்டு முதல் திருப்பி செலுத்த வேண்டும்)

### திட்ட செயலாக்க பகுதி

நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம் கீழ்காணும் 24 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, சேலம், நாமக்கல், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர்.

மாநில வழிகாட்டுதல் குழுவால் தேர்வு செய்யப்படும் நீர்வடிப் பகுதிகளை தவிர்த்து இராமநாதபுரம், திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சி மற்றும் நாகபட்டினம் ஆகிய 5 மாவட்டங்களிலும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டு முன்னோடித்திட்டத்தின் கீழ் நபார்டு வங்கி மூலம் முழு மானியத்தில் 5 நீர்வடிப்பகுதிகளில் பண்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

**2009–10** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் புதிய முழு செயல்பாட்டு நிலையில் பல்வேறு இனங்களுக்கு நிலையான நிதி ஒதுக்கீடு

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒரு எக்டேருக்கான செலவு | | ரூ.12,000.00 |
| 2. | திட்ட செயலாக்கம் | 70% | ரூ. 8,400.00 |
| 3. | நிர்வாகச் செலவு | 10% | ரூ. 1,200.00 |
| 4. | நிலமற்ற விவசாயி மற்றும் பெண்களின் வாழ்க்கை தர மேம்பாட்டுக்கு | 7.5% | ரூ. 900.00 |
| 5. | சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பயிற்சி | 12.5% | ரூ. 1,500.00 |

**திட்ட செயலாக்கம்**

**2004–05** மற்றும் **2005–06** ஆம் ஆண்டுகளில் **100** நீர்வடிப் பகுதி திட்டங்கள் மாநில வழி காட்டுதல் குழுவால் தேர்வு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் முதல் **18** மாதங்களில் கொள் திறன் வளர்ப்பு நிலை பணிகளும், பின்னர் **6** மாதங்களில் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணிகளும் முதல் இரண்டு ஆண்டுகளில் நபார்டு வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மூன்றாம் ஆண்டு முதல் தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைக்கு இத்திட்டங்கள் முழு செயலாக்கம் மேற்கொள்ள நபார்டு வங்கி மூலம் ஒப்படைக்கப்பட்டது.

வரும் நிதியாண்டில் **(2010–11)** தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் **38** முழு செயலாக்க நிலையிலுள்ள நீர்வடிப்பகுதிகளில் **ரூ.500.00** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் **4166** எக்டர் பரப்பளவு பண்படுத்தப்படவுள்ளது.

### 4. தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் - ராஷ்ட்டிரிய கிருஷ்ஷி விக்காஸ் யோஜனா

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டமானது, வேளாண்மை தொகுப்பில் ஆண்டுக்கு 4% வளர்ச்சி அடையும் வகையில் செயலாக்கப்படுகிறது. வேளாண்மையில், விவசாயிகள் அதிக அளவு பங்கேற்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். விவசாயிக்கு முக்கிய பயிரிலிருந்து கிடைக்கும் உற்பத்தியில் ஏற்படும் இழப்புகளை குறைத்திட, நவீன தொழில்நுட்பங்கள் வழங்குவதுடன் விவசாயிக்கு அதிக வருமானமும், விவசாயத்தில் மட்டுமல்லாது விவசாயம் சார்ந்த இதர உபதொழில்களிலும் அதிக உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் பெற்றிட வழிவகுக்கிறது. இத்திட்டம் மத்திய அரசின் **100%** நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் வேளாண்மை, கால்நடை, பால் உற்பத்தி, மீன் வளம் மற்றும் பாசன மேம்பாடு ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம், தமிழ் நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் கீழ்கண்ட திட்டங்கள் செயலாக்கப்படுகிறது :

**(i) பட்டாவுடன் கூடிய ஒட்டுமொத்த 50 ஏக்கரும் அதற்கு மேலும் உள்ள புஞ்சை மானாவாரி தொடர் தொகுப்பு நிலங்களில் பழ மர கன்றுகள்/மர பயிர் கன்றுகள் நட்டு நிலங்களை மேம்படுத்தும் திட்டம்**

ஒட்டுமொத்த **50** ஏக்கரும் அதற்கு மேலும் உள்ள புஞ்சை மானாவாரி பரப்பில் விவசாயிகளின் விருப்பத்திற்கு ஏற்றவாறு பாசன வசதி உள்ள நிலத்தில் தோட்டக்கலை பயிர்களும் இதர பரப்பில் உயிர் எரிசக்தி மரக்கன்றுகளும் நடவு செய்து வழங்கப்படுகிறது. இத்திட்டம் **9** மாவட்டங்களில் ஒட்டுமொத்தமாக **50** ஏக்கர் மற்றும் அதற்கு மேல் பரப்பில் திட்ட வழிமுறைகளின்படி செயலாக்கப்படுகிறது. **2007–08** ஆம் ஆண்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட **35** தொடர் தொகுப்புகளில் பிப்ரவரி **2010** வரை **35** தொடர் தொகுப்புகள் **1972** ஏக்கர் பரப்பளவில் மானாவாரி நிலங்கள் **ரூ.430.53**

இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 1187 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் பெறுகிறார்கள். தற்போது அத்தொடர் தொகுப்புகளில் மரக்கன்றுகள் நடும் பணி நடைபெற்று வருகிறது.

இத்திட்டம் 2008–09 ஆம் ஆண்டிலும் தெரிவு செய்யப்பட்ட 9 மாவட்டங்களான ஈரோடு, வேலூர், திருவண்ணாமலை, திருச்சி, கடலூர், சிவகங்கை, விருதுநகர், தேனி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மொத்தம் 27 மானாவாரி (புஞ்சை) தொடர் தொகுப்புகள் அமைத்து சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் அடையும் வகையில் செயல்படுத்தபடுகிறது. இதற்கென ரூ.364.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 14 தொடர் தொகுப்புகள் 810 ஏக்கர் பரப்பளவில் நிலங்களை மேம்படுத்த ரூ.175.00 இலட்சம் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 422 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறுகிறார்கள். தற்போது அத்தொடர் தொகுப்புகளில் நில மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 5. ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம்

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் 24 மாவட்டங்களில் 544 நீர்வடிப்பகுதிகளில் 2009–10 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டசெலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 90 மற்றும் 10 என்ற சத அளவில் பகிர்ந்துகொள்கின்றன. இத்திட்டத்தில் 2,49,524 இலட்சம் எக்டர் ரூ.299.432 கோடி செலவில் ஐந்து முதல் ஏழாண்டு காலத்தில் மேம்படுத்தப்படவுள்ளது.

**குறிக்கோள் :**

- இயற்கை வளங்களையும், வாழ்வாதாரத்தினையும் சமஅளவில் எடுத்து செல்ல நீர்வடிப்பகுதி மேம்பாடு மற்றும் திறமையான நீர்வள மேலாண்மையையும் சமுதாய பங்களிப்புடன் செய்தல்.
- இயற்கை ஆதாரங்களை பராமரித்து மேம்பாடு செய்து பாதுகாப்பதன் மூலம் சுற்றுசூழலை மேம்படுத்துதல்.
- உள்ளூர் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த திட்டமிட்ட விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த நடவடிக்கைகள் மூலம் வளங்களை பாதுகாத்து மறு உற்பத்தி செய்வதற்கும் வழிவகுத்தல்.
- கிராம சமுதாயத்தினருக்கு நிலைத்த நீர் ஆதாரங்கள் மற்றும் நிதி ஆதாரங்கள் உருவாக்குவதற்க்காக மழைநீரை நீர் வடி பகுதியில் பல்வேறு அணுகுமுறைகளை பின்பற்றி பாதுகாத்தல்.
- தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலை உணர்வு நுட்பங்களை பயன்படுத்தி திட்டமிட்டு மேலாண்மை மற்றும் மதிப்பீடு செய்தல்.
- ஊரக பகுதிகளில் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல்.

மாநில அளவிலான புள்ளி விவர மையம் மற்றும் மாவட்ட அளவிலான நீர்வடிப்பகுதி புள்ளி விவர மையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:

ஐந்து முதல் ஏழு ஆண்டு வரை தொடர்ந்து செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை (IWMP) திட்டத்தின் கீழ் மத்திய அரசு வழங்கும் 90% நிதி உதவியில் 6% நிதியாக ரூ.1,616.90 இலட்சம் அக்டோபர் 2009 ல் பெறப்பட்டுள்ளது. 2009–10 ஆம் ஆண்டிற்கான ஒப்பளிக்கப்பட்ட 50 திட்ட பகுதிகளில் ஆரம்ப கட்ட பணிகளான நுழைவு கட்ட பணிகள், மக்கள் பங்கேற்பு அணுகுமுறை, அடிப்படை விபர கணக்கெடுப்பு போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. 2010–11 ஆம் ஆண்டிற்கான புதிய 50 திட்டப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

## 6. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

தமிழ் நாட்டின் பெரும்பாலான பகுதி வறண்ட சீதோஷ்ண நிலையை கொண்டதாகவும் சீரற்ற பருவ மழை பெய்யும் தன்மையை உடையனதாகவும் உள்ளது. நீர்வடிப்பகுதிகளிலுள்ள பயிர் உற்பத்தி, நில, நீர் மற்றும் மனிதவளம் ஆகியவற்றின் உற்பத்தி திறன் போன்றவற்றுக்கு வறட்சியினால் ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளை குறைக்கும் நோக்குடன் 1972–73 ஆம் ஆண்டு முதல்

தமிழகத்தின் ஒரு சில மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் தற்போது வறட்சியால் பாதிக்கப்படும் என மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட 17 மாவட்டங்களிலுள்ள 80 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இப்பகுதிகளில் வறட்சியால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல்.**

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்கள் |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | அன்னூர், அவிநாசி, பல்லடம், திருப்பூர், சூலூர் |
| 2 | தருமபுரி | மொரப்பூர், தருமபுரி, நல்லம்பள்ளி, பாலக்கோடு, பென்னகரம், காரிமங்கலம் |
| 3 | திண்டுக்கல் | ஆத்தூர், நத்தம், கொடைக்கானல் |
| 4 | கரூர் | அரவக்குறிச்சி, க.பரமத்தி |
| 5 | கிருஷ்ணகிரி | பர்கூர், ஓசூர், கெலமங்களம், சூளகிரி, தளி, ஊத்தங்கரை, வேப்பனப்பள்ளி, மத்தூர் |
| 6 | நாமக்கல் | மல்லசமுத்திரம், எலச்சிபாளையம், புதுச்சத்திரம் |
| 7 | பெரம்பலூர் | ஆண்டிமடம், அரியலூர், செந்துரை, வேப்பூர், ஆலத்தூர், ஜெயம்கொண்டான் |
| 8 | புதுக்கோட்டை | கந்தர்வகோட்டை, கரம்பக்குடி, புதுக்கோட்டை, திருவரங்குளம் |
| 9 | இராமநாதபுரம் | போகலூர், கடலாடி, கமுதி, மண்டபம், முதுகுளத்தூர், பரமக்குடி, திருப்புல்லாணி |
| 10 | சேலம் | நங்கவள்ளி, மேச்சேரி, கொங்கனாபுரம், மகுடஞ்சாவடி, காடயாம்பட்டி |
| 11 | சிவகங்கை | தேவகோட்டை, இளையான்குடி, காளையார்கோயில், கல்லல், கண்ணன்குடி, சிங்கம்புனரி, எஸ்.புதூர் |
| 12 | தூத்துக்குடி | கயத்தார், கோவில்பட்டி, ஓட்டப்பிடாரம், புதூர், சாத்தான்குளம், தூத்துக்குடி, உடன்குடி, விளாத்திகுளம் |
| 13 | திருச்சிராப்பள்ளி | துறையூர் |
| 14 | திருநெல்வேலி | குருவிகுளம் |
| 15 | திருவண்ணாமலை | செய்யார் |
| 16 | வேலூர் | வேலூர், கணியம்பாடி, திமிரி, காட்பாடி, ஆலங்காயம், கந்திலி |
| 17 | விருதுநகர் | காரியாபட்டி, நரிக்குடி, சாத்தூர், சிவகாசி, வெம்பக்கோட்டை, விருதுநகர், அருப்புக்கோட்டை |

பல்வேறு கால கட்டங்களில் இத்திட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் திட்டச் செயலாக்க முறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. முதலில் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கும் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கும் இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை அளிக்கப்பட்டது. அது படிப்படியாக மாற்றம் செய்யப்பட்டு தற்போது மழை நீரினை சேமித்து, நீர் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஒட்டு மொத்த பொருளாதார மேம்பாட்டினை நீர்வடிப்பகுதிகளில் உருவாக்குவதாகும். அது போலவே திட்டச் செயலாக்க முறைகளில் மாற்றம் செய்யப்பட்டு அரசு துறைகளின் மூலம் செய்யப்பட்டுவந்த பணிகள் தற்போது அரியாலி நெறிமுறையின்படி ஊராட்சி மன்றம் மற்றும் பயனாளி குழுக்கள் இணைந்து பணிகளை தேர்வு செய்து அவர்கள் மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறட்சியின் பாதிப்பை தவிர்ப்பதற்கு மக்கள் பங்கேற்புடன் கூடிய நீர்வடிப் பகுதி அணுகு முறைக்கு இத்திட்டத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. ஐநூறு எக்டர் கொண்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டிற்கான செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டச் செயலாக்க காலம் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகள் ஆகும். ஒரு எக்டர் மேம்பாட்டிற்கு செலவினத் தொகையாக ரூ.6000/– அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் திட்ட செலவினத்திலேயே மேற்கொள்ளப் பட்டாலும் பயனாளிகளின் பங்குத் தொகையாக 10 சதவீதம் பெறப்படுகிறது. சமூக பணிகள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி

யினருக்கான பணிகளில் பங்களிப்பு 5 சதவீதம் ஆகும். இந்த பங்குத் தொகையினை இத்திட்டம் முடிவடைந்த பிறகு திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட பணிகளை பராமரிப்பதற்காக தனியாக அந்தந்த நீர்வடிப்பகுதிகளிலுள்ள வங்கிகளில் சேமித்து வைக்கப்படுகிறது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் கீழ் கண்ட அம்சங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்.

நிலமேம்பாடு: நிலம் சமப்படுத்துதல், சமஉயர வரப்பு அமைத்தல், வண்டல் மண் அடித்தல், கல்வரப்பு அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி எடுத்தல்.

நீர்வளமேம்பாடு: கால்நடைக் குட்டை அமைத்தல், பண்ணைக்குட்டை அமைத்தல், ஊரணி சீரமைத்தல், கண்மாய் தூர்வாருதல், வரத்துக்கால்வாய் அமைத்தல் மற்றும் சீரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், கசிவுநீர் குட்டை அமைத்தல், மற்றும் குடிநீர் ஆதாரமேம்பாடு செய்தல்.

தாவரவள மேம்பாடு: வேளாண் காடுகள் அமைத்தல், பழமரக்கன்றுகள் வளர்த்தல், தீவனப்பயிர் மேம்பாடு செய்தல், செயல் விளக்கப்பாத்தி அமைத்தல், சமுதாய நாற்றங்கால் பண்ணை அமைத்தல், சமூக காடுகள் வளர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல்.

இத்திட்டத்தின்கீழ் நீர்வடிப் பகுதிகள் மத்திய அரசால் அணிவாரியாக ஒப்பளிப்பு செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1999–2000 ஆம் ஆண்டு முதல் 2006–07 ஆம் ஆண்டு முடிய மொத்தம்

7 அணிகளில் 1222 நீர்வடிப் பகுதிகளில் ரூ.33,670.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 6,14,142 எக்டர் நிலத்தை மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் ரூ.27,155.80 இலட்சத்தை விடுவித்துள்ளன. இதில் ரூ.25,586.52 இலட்சம் 17 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளால் செலவு மேற்கொள்ளப்பட்டு 4,76,422 எக்டர் நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது. தற்போது செயல்படுத்தப்படும் 1222 நீர்வடிப் பகுதிகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சத்தில்)

| செயல்பாட்டிலுள்ள திட்டங்களின் எண்ணிக்கை | **1222** |
|---|---|
| திட்டமதிப்பீடு | 33,670.00 |
| மத்திய அரசு | 25,252.50 |
| மாநில அரசு | 8,417.50 |
| விடுவிக்கப்பட்ட தொகை | 27,155.80 |
| மத்திய அரசு | 20,407.59 |
| மாநில அரசு | 6,748.21 |
| செலவு செய்த தொகை | 25,586.52 (94%) |
| மேம்படுத்தப்பட்ட பரப்பளவு (எக்டரில்) | 4,76,422 (78%) |

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டச் செயலாக்கத்திற்காக 2009–2010 ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசு ரூ.1,215.132 இலட்சமும், மாநில அரசு தன் பங்காக ரூ.582.981 இலட்சமும் விடுவிக்கப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 7. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் வனம் அல்லாத தரிசு நிலங்களை வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டம் செயல்படுத்தப்படாத ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மழைநீரை சேமித்து அதன் உதவியுடன் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதாகும். இது வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டம் போல் அல்லாமல், மாநில அரசுக்கு வனம் சாரா தரிசு நிலங்களை திட்ட அணுகுமுறையின் மூலம் மேம்படுத்துவதற்கு ஓர் வாய்ப்பளித்துள்ளது. தற்போது 24மாவட்டங்களில் உள்ள 96 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல்.

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | பொங்கலூர், பெரியநாயக்கன் பாளையம், சர்க்கார் சாமக்குளம், பொள்ளாச்சி (வடக்கு), கிணத்துக்கடவு, மதுக்கரை, |
| 2 | கடலூர் | கடலூர், பண்ருட்டி, மங்களூர் |
| 3 | தருமபுரி | அரூர், பாப்பிரெட்டிபட்டி |
| 4 | திண்டுக்கல் | வேடசந்தூர், வத்தலக்குண்டு, வடமதுரை, திண்டுக்கல், குஜிலியம்பாறை |
| 5 | ஈரோடு | மூவலூர், தாளவாடி, அந்தியூர், பெருந்துரை, சத்தியமங்கலம் |
| 6 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், வாலாஜாபாத், மதுராந்தகம் |
| 7 | கரூர் | கடவூர், தோகமலை, கிருஷ்ணராயபுரம் |
| 8 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம் |
| 9 | மதுரை | அலங்காநல்லூர், மேலூர், செல்லம்பட்டி, உசிலம்பட்டி, கள்ளிக்குடி |
| 10 | நாமக்கல் | சேந்தமங்கலம், கொல்லிமலை, நாமகிரிப்பேட்டை, பள்ளிப்பாளையம், ராசிபுரம் |
| 11 | பெரம்பலூர் | பெரம்பலூர், அரியலூர், செந்துரை, திருமானூர், டி. பளூர், வேப்பந்தட்டை |
| 12 | புதுக்கோட்டை | அறந்தாங்கி, ஆவுடையார் கோவில், திருமயம் |
| 13 | இராமநாதபுரம் | நயினார்கோவில், ஆர். எஸ். மங்கலம் |
| 14 | சேலம் | சங்ககிரி, வீரபாண்டி, பனமரத்துப்பட்டி, வாழப்பாடி, பெத்தநாயக்கன்பாளையம் |
| 15 | சிவகங்கை | சிவகங்கை, மானாமதுரை, திருப்புவனம், சாக்கோட்டை |
| 16 | தேனி | பெரியகுளம், போடிநாயக்கனூர் |
| 17 | தூத்துக்குடி | ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, திருச்செந்தூர், கருங்குளம் |
| 18 | திருச்சிராப்பள்ளி | தாத்தையங்கார்பேட்டை, உப்பிலியாபுரம், மணச்சநல்லூர், முசிறி, புள்ளம்பாடி, மருங்காபுரி, வையம்பட்டி |
| 19 | திருநெல்வேலி | நாங்குநேரி, களக்காடு |
| 20 | திருவள்ளூர் | பூண்டி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை, திருவாலங்காடு |
| 21 | திருவண்ணாமலை | வெம்பாக்கம், கலசப்பாக்கம், தண்டராம்பட்டு, புதுப்பாளையம் |
| 22 | வேலூர் | வாலாஜா, சோளிங்கர், நாட்றாம்பள்ளி, ஜோலார்பேட்டை |
| 23 | விழுப்புரம் | வானூர், மரக்காணம், செஞ்சி, மேல்மலையனூர் |
| 24 | விருதுநகர் | விருதுநகர், வெம்பக்கோட்டை,சிவகாசி, ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், திருச்சுழி |

இத்திட்டம் தமிழ் நாட்டில் 1993–94 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏப்ரல் 1995ஆம் ஆண்டு முதல் பொது நெறிமுறைகளின் கீழ் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் போல் இத்திட்டமும் கொண்டு வரப்பட்டு தற்போது அரியாலி நெறிமுறைகளின் படி ஊராட்சி மன்றம் மற்றும் பயனாளி குழுக்கள் இணைந்து பணிகளை தேர்வு செய்து அவர்கள் மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டச் செயலாக்க காலம் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகள் ஆகும். ஒரு எக்டருக்கான மேம்பாட்டிற்கு செலவினத் தொகையாக ரூ.6000/– அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் திட்ட செலவினத்திலேயே மேற்கொள்ளப்பட்டாலும் பயனாளிகளின் பங்குத் தொகையாக 10 சதவீதம் பெறப்படுகிறது. சமூக பணிகள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான பணிகளில் பங்களிப்பு 5 சதவீதம் ஆகும். இந்த பங்குத் தொகையினை இத்திட்டம் முடிவடைந்த பிறகு திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட பணிகளை பராமரிப்பதற்காக தனியாக அந்தந்த நீர்வடிப்பகுதிகளிலுள்ள வங்கிகளில் சேமித்து வைக்கப்படுகிறது. இத்திட்டச் செயலாக்கத்திற்கான செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் 11 : 1 என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் பகிர்ந்து கொள்கின்றன.

இத்திட்டத்தின்கீழ் நீர்வடிப் பகுதிகள் மத்திய அரசால் திட்டவாரியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1999–2000 ஆம் ஆண்டு முதல் 2006–07 ஆம் ஆண்டு முடிய மொத்தம் 80 திட்டங்கள் மூலம் 910 நீர்வடிப் பகுதிகளில் ரூ.26,220.39 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 4,57,596 எக்டர் நிலத்தை மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் ரூ.20,760.92 இலட்சத்தை விடுவித்துள்ளன. இதில் ரூ.19,353.28

இலட்சம் 24 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளால் செலவு மேற்கொள்ளப்பட்டு 3,35,745 எக்டர் நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுவருகிறது. தற்போது செயல்படுத்தப்படும் 80 திட்டங்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சத்தில்)

| | |
|---|---|
| செயல்பாட்டிலுள்ள திட்டங்களின் எண்ணிக்கை | 80 |
| திட்டமதிப்பீடு | 26,220.39 |
| மத்திய அரசு | 24,241.43 |
| மாநில அரசு | 1,978.96 |
| விடுவிக்கப்பட்ட தொகை | 20,760.92 |
| மத்திய அரசு | 19,249.14 |
| மாநில அரசு | 1,511.78 |
| செலவு செய்த தொகை | 19,353.28 (93%) |
| மேம்படுத்தப்பட்ட பரப்பளவு (எக்) | 3,35,745 (73%) |

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கத்திற்காக 2009–2010 ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசு ரூ.720.808 இலட்சமும், மாநில அரசு தன் பங்காக ரூ.107.067 இலட்சமும் விடுவிக்கப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.